பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

20 09 2025 saturday 6 45 am

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, 25 கோடிக்கும் அதிகமான மக்கள் ஏழ்மை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் நீண்ட தூர ஏவுகணைகள் முக்கிய பங்காற்றியதாக இந்திய விமானப்படை தளபதி ஏர்மார்ஷல் அமர்ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார்
- தமிழகத்தில் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறையின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மூர்த்தி கூறியுள்ளார்.
- திமுக அரசு மாநிலத்தின் நிதிநிலைமையை சீர்குலைத்து விட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

>>>>>><<<<<<

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, 25 கோடிக்கும் அதிகமான மக்கள் ஏழ்மை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று தமிழக உணவுப் பொருட்கள் வியாபாரிகள் சங்கத்தின் 80வது ஆண்டு விழாவில், சிறந்த தொழில் முனைவோருக்கு விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

(சவுண்ட் பைட்-நிர்மலா சீதாராமன் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் நீண்ட தூர ஏவுகணைகள் முக்கிய பங்காற்றியதாக இந்திய விமானப்படை தளபதி ஏர்மார்ஷல் அமர்ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற விமானப்படை சங்கத்தின் ஆண்டு விழா கூட்டத்தில் பேசிய அவர், பாகிஸ்தானுடனான சண்டை தீவிரமடைந்த போது, ஏவுகணைகளை கொண்டு துல்லியமாக இலக்குகளை விமானப்படையினர் தாக்கியதாக கூறினார்.

பொதுவாக இருநாடுகளுக்கு இடையே மோதல் ஏற்படும் போது, இலக்குகள் அடையப்பட்டவுடன், மோதலை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகவும், இந்த விஷயத்தில் உலக நாடுகள் இந்தியாவிடமிருந்து பாடம் கற்க வேண்டும் என்றும் ஏர்மார்ஷல் அமர்ப்ரீத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறையின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வணிகவரி துறையின் செயல்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஓசூர் போன்ற வணிகவரி அதிகமாக வசூலாகும் இடங்களில் வரிவசூல் மையங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களும் நவீனமயமாக்கப்பட்டு, பொதுமக்களுக்கு சேவைகள் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

திமுக அரசு 5 லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கி, மாநிலத்தின் நிதிநிலைமையை சீர்குலைத்து விட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இந்த கடன்சுமை முழுவதும் பொதுமக்களின் மீது தான் சுமத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

கடனை சமாளிப்பதற்காக திமுக அரசு சொத்து வரி, குடிநீர், வீட்டு வரி என அனைத்து வரிகளையும் உயர்த்திவிட்டதாக அவர் தெரிவித்தார்.

முதலமைச்சரின் வெளிநாட்டு பயணத்தில் 932 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக கூறப்பட்டாலும், அதற்கேற்ப வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தகவல் கேட்டு மனு அளிப்போருக்கு 30 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று மாநில தகவல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய மாநில தகவல் ஆணையர் திரு. பிரியகுமார், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுப்பப்படும் கேள்விகளுக்கு உரிய விளக்கங்களை அதிகாரிகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல் அளிக்க மறுக்கும் பொது தகவல் அலுவலர்கள் மீது, துறை ரீதியலான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும் என்றும் திரு. பிரியகுமார் கூறினார்.

>>>>>><<<<<<

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்…

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது டிஜிட்டல் சுகாதார திட்டம்.

*(மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் நடவடிக்கை காரணமாக நாடுமுழுவதும் சுகாதார கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மக்களுக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்குவதில் டிஜிட்டல் சேவைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.*

*இதன் அடிப்படையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி. கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.*

*(சவுண்ட் பைட் மோடி – தமிழ் - 47 செகண்ட்ஸ்)*

*தனியார் பங்களிப்புடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வரும் இந்த இயக்கம், நாடுமுழுவதும் மருத்துவமனைகளில் டிஜிட்டல் சுகாதார வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.*

*ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில், ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ள இந்த இயக்கம், டிஜிட்டல் சுகாதார கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் முதுகெலும்பாக உள்ளது என்றால் மிகையல்ல.*

*இந்த இயக்கத்தின் கீழ், 80 கோடிக்கும் மேற்பட்ட டிஜிட்டல் சுகாதார கணக்குகள் உருவாக்கப்பட்டு, 71 கோடி மருத்துவ சிகிச்சைக்கான விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.*

*சுகாதார சிகிச்சைகளை வழங்குவதில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு இவை உதவிடும். இந்த இயக்கத்தின் கீழ், இ-சஞ்சீவனி என்ற அதிநவீன தொலைபேசி வழி சுகாதார சேவைகளும் வழங்கப்படுகின்றன.*

*தொலைதூரங்களில் உள்ள கிராமங்களுக்கும் சுகாதார சேவைகளை கொண்டு சேர்ப்பதில் இ-சஞ்சீவனி முக்கியப் பங்கு வகித்து வருகிறது (Closing Signature Tune).*

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

எஸ்தோனியா வான் எல்லைக்குள் அத்துமீறி ரஷ்ய போர் விமானங்கள் நுழைந்ததாகவும் அதனை நேட்டோ படையின் விமானங்கள் இடைமறித்ததாகவும் எஸ்தோனிய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ரஷ்யா நேற்றிரவு 90 ட்ரோன்களை கொண்டு தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தியதாக யுக்ரைன் அதிபர் அதிபர் திரு. வொலாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

சர்வதேச அஞ்சல் சங்கத்தின் நிர்வாக குழுவுக்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் கிராம உதவியாளர் காலிப் பணியிடங்களுக்கு இன்று முதல் நடைபெறவிருந்த நேர்காணல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. இளம் பகவத் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

உடுமலை அமராவதி அணையிலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகே சாலையை கடக்க முயன்ற போது, சரக்கு வாகனம் மோதியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

நெல்லை மாவட்டம், பாபநாசம் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கிராமங்களில் கரடிகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதால், வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

>>>>>><<<<<<

மும்பையிலிருந்து 182 பயணிகளுடன் தாய்லாந்து சென்று கொண்டிருந்த விமானம், நடுவானில் பறந்து கொண்டிருந்த போது வெடிகுண்டு மிரட்டல் வந்ததை அடுத்து, சென்னையில் நேற்றிரவு அவசரமாக தரையிறக்கப்பட்டது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

துபாயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 188 ரன் எடுத்தது.

189 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஓமன் அணி, 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 167 ரன் மட்டுமே எடுத்தது.

இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள சூப்பர் 4 சுற்று ஆட்டத்தில் பங்களாதேஷ் - இலங்கை அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இந்தியா - ஆஸ்திரேலியா மகளிர் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று தில்லியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி, பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அம்ச கருணன் - எம்.ஆர். அர்ஜுன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை 18-21, 21-18, 21-18 என்ற செட்கணக்கில் தைவானின் Po Yu Lai – Fu Cheng Tsai இணையை வென்றது.

>>>>>><<<<<<

கொழும்பில் நடைபெற்று வரும் 17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா 1-0 என்ற கோல்கணக்கில் பூட்டானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<